ஏப்ரல் 2018–ஆம் மாதத்திற்கான சம்பளம் வழங்கும் அதிகாரம் (Pay authorization for the month of April 2018)

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை – 600 009.

**கடித எண். 8431/பக5(1)/2018–1, நாள்: 24.04.2018.**

அனுப்புநர்
திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர் சென்னை–01 / 08 / 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

ஐயா,

பொருள்: பள்ளிக்கல்வி – ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர் 6156 தற்காலிக பணியிடங்கள் 01.01.2018 முதல் தொடர் நீட்டிப்பு ஆணை வேண்டி கருத்துரு பெறப்பட்டது – ஏப்ரல் 2018ஆம் மாதத்திற்கான சம்பளம் வழங்க அதிகார ஆணை (Pay Authorization) வழங்குதல் – சார்ந்து.

பார்வை :

1. அரசாணை (1டி) எண்.151, பள்ளிக்கல்வி [பக5(1)]த் துறை, நாள் 23.02.2017.
2. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.085220/எல்/இ3/2017, நாள் 12.04.2018.

------

பல்வேறு அரசாணைகளின்படி அரசு / நகராட்சி / உதவிபெறும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் தோற்றுவிக்கப்பட்ட 6156 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதார் தற்காலிக பணியிடங்களுக்கு பார்வை ஒன்றில் காணும் அரசாணையின்படி, 31.12.2017 வரை தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் தற்காலிக பணியிடங்களுக்கு 01.01.2018 முதல் மேலும் ஓராண்டிற்கு தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த கருத்துரு பள்ளிக் கல்வி இயக்குநரால் சமர்ப்பிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

2. மேற்குறிப்பிட்டவாறு 6156 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதார் தற்காலிக பணியிடத்திற்கு 01.01.2018 முதல் ஓராண்டிற்கு தொடர் நீட்டிப்பு வழங்குவது தொடர்பான கருத்துரு பரிசீலிக்கப்பட்டு வரும் நிலையில், துறைத்தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச் 2018, ஆகிய மூன்று மாதங்களுக்கு ஊதியம் பெறத்தக்க வகையில் பள்ளிக் கல்வி இயக்குநரால் ஊதிய கொடுப்பாணை வழங்கப்பட்டுள்ளது. தற்போது பார்வை இரண்டில் காணும் கடிதத்தின் மூலம் மேற்குறிப்பிட்ட 6156 தற்காலிக பணியிடங்களுக்கு, ஏப்ரல் 2018ஆம் மாதத்திற்கு ஊதியம் பெறத்தக்க வகையில் ஊதியம் வழங்க அதிகார ஆணை (Pay Authorization) வழங்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. பள்ளிக் கல்வித் துறையின் தற்காலிக பணியிடங்களுக்கு தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துரு, அரசின் பரிசீலனையில் உள்ளதால், பணியிட தொடர் நீட்டிப்பினை எதிர்நோக்கி, 6156 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர் தற்காலிக பணியிடங்களுக்கு சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும்பட்சத்தில், ஏப்ரல் 2018ம் மாதத்திற்கான ஊதியப் பட்டிகளை அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் அனுமதிக்குமாறு தங்களை கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

4. இக்கடிதம் நிதித்துறையின் அ.சா.எண்.20785/Edn-II/2018, நாள்: 23.04.2018–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள

24/4/18

(அரசு சார்புச் செயலாளர்)
அரசு முதன்மைச் செயலாளருக்காக

24-4-18

<u>நகல்</u>
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
நிதி(கல்வி–II)துறை , சென்னை–9,
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.